2006 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

6. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல் – கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாள், வியாழக்கிழமை நண்பகல் 12–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 1-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

முற்பகல் 10–00

(ஆ) மானியக் கோரிக்கைகள், 2006–2007, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிதல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில்

முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2006-2007."

7. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை. மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,211,56,44,000/– மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,98,70,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 881, திரு. என். நன்மாறன்.*

திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உள்ள மின்மாற்றிக்குத் துணையாக துணை மின்மாற்றி (stand by) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*